# தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம்

### திட்ட அறிமுகம் :

தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம் (TNRTP) உலக வங்கியின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் ஒரு முன்னோடி திட்டமாகும். இத்திட்டம் தொழில் மேம்பாடு, மூலம் வளத்தையும் அதன் நிலைத்த மற்றும் நிடித்த தன்மையும் உருவாக்கி ஊரக பகுதிகளில் தொழில் வளர்ச்சியையும் முன்னேற்றத்தையும் உருவாக்க செயல்படுத்தப்படும் ஒரு தனித்துவம் வாய்ந்த திட்டமாகும்.

## நோக்கங்கள்

1. ஊரகத்தொழில் முனைவுகளை உருவாக்குதல்,
2. நிதி சேவைகளுக்கு வழிவகுத்தல் மற்றும்
3. வேலைவாய்ப்பினை உருவாக்குதல்







### திறன்கள் மற்றும் வேலைவாய்ப்புகள்:

இக்கூறின்நோக்கமானது

அ) நிலையான ஊதியம் மற்றும் சுயவேலை வாய்ப்பினை உருவாக்குதல்,
ஆ) உயர்மதிப்புடைய வேளாண் மற்றும் அதைசார்ந்த நடவடிக்கைகளுக்கு தொடர்புடைய திறன்களை மேம்படுத்துதல் மற்றும்
இ) சந்தைக்கொப்ப திறன்கள்மற்றும் தொழில் முனைவோர் மேம்பாடு ஆகியவற்றின் மூலமாக தொழில் முனைவோரை உருவாக்குதல் ஆகும்.

இத்துணைக் கூறின் மூலம் 80,000 இளைஞர்களுக்கு தொழிற்திறன் மேம்பாட்டிற்கான பயிற்சினை (ஏற்கனவே அரசால் செயல்பட்டு வரும் முதன்மையான தொழிற்பயிற்சி திட்டங்கள் மூலம் 40,000 இளைஞர்கள் மற்றும் சமூக பயிற்சி பள்ளிகள் மூலம் 40,000 இளைஞர்களுக்கு பயிற்சி) வழங்கிட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக இச்செயல்பாட்டில் மொத்த பயனாளிகளில் 40ரூ பெண்களாக இருக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு திட்டமிடப்பட்டுள்ளது.
இக்கூறு பயிற்சிக்கான இலக்கு இளைஞர்களை கண்டறிதல், சேர்த்தல், பயிற்சிக்கு முந்தைய மற்றும் பிந்தைய சேவைகளை உள்ளடக்கியதாகும்.

### திட்டமேலாண்மை கண்காணிப்பு மற்றும் செயல்பாடு:

இக்கூறின் நோக்கமானது இந்தத்திட்டத்திற்கு தேவையான சேவைகளை வழங்குதல், மேலாண்மை மற்றும் கண்காணிப்பு முறையை மேம்படுத்துதல் விநியோக செயல்முறை உருவாக்குதல், நிதிமேலாண்மை, மனித வள ஆதாரங்களை வழங்குதல், கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டிற்கான பணியாளர்களை தேர்வு செய்தல், திட்ட நிர்வாகம், சமூக, சுற்றுசூழல் மற்றும் பழங்குடியினரின் சமுகப்பாதுகாப்பு மற்றும் சிறப்பான முறையில் திட்டத்தை செயல்படுத்துவதற்கான தகவல் தொடப்பு தொழில்நுட்பத்தை ஏற்படுத்துதல் ஆகும்.

தமிழ்நாடு
ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித்துறை

**திட்ட பயனாளிகள்:**

முந்தைய திட்டங்களால் உருவாக்கப்பட்ட சொத்துக்கள், வளங்கள் மற்றும் திறன்களைக் கொண்ட சுய உதவிக் குழு உறுப்பினர்களின் குடும்பங்களே இத்திட்டத்தின் முதன்மை இலக்கு பயனாளிகள் ஆவர்.



**இத்திட்டத்தில் முக்கியத்துவம்**

- பெண்கள்,
- ஆதிதிராவிடர்,
- பழங்குடியினர்,
- மாற்றுத் திறனாளிகள்,
- இளைஞர்கள் மற்றும்
- ஆர்வமுள்ள தொழில் முனைவோர்களுக்கு அளிக்கப்படும்.

இத்திட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டாரங்களில் உள்ள வேளாண் சார்ந்த மற்றும் வேளாண் சாரா துறைகளைச் சேர்ந்த உற்பத்தியாளர்கள் இணைந்த குழு, கூட்டமைப்புகள் மற்றும் தொழில் முனைவோர்கள் ஆகியோர் பயனாளிகள் ஆவர்.

**திட்டக்கூறுகள்**

தமிழ்நாடு ஊரக புத்தாக்கத்திட்டம் நான்கு கூறுகளை உள்ளடக்கியது:




**கிராம புற தொழில் முனைவு சூழல் மேம்பாடு:**

இக் கூறின் முக்கிய நோக்கமானது, தேவையான சந்தை வாய்ப்புகளை கண்டறிதல், பொருட்களின் மதிப்புச்சங்கிலி வாய்ப்புகள் கண்டறிய உதவுதல், தொழில் முனைவிற்கான சூழலை உருவாக்குதல், கிராமப்புற தொழில் நிறுவனங்கள், உருவாக தேவையான தகவல் வழிகாட்டியாக செயல்படுதல், தனிநபர், கூட்டு நிறுவங்களை முன்னேற்றுதல் மற்றும் முன்னுரிமைப்படுத்தப்பட்ட பொருட்களின் மதிப்பு சங்கிலி நடவடிக்கைகளை வலுப்படுத்துதல் ஆகும்.

மேலும் முன்னுரிமைப்படுத்தப்பட்ட முக்கிய தொழில்சார்ந்த துறைகள்/துணைதுறைகள்/பொருட்கள் வகைப்படுத்தப்பட்டு, அதற்கு தேவையான முதலீடுகள் திட்டத்தின் உள்ளடக்கிய உத்திகள் மூலமாகவும் பொருட்களின் மதிப்பு சங்கிலி பகுப்பு ஆய்வின் மூலமாகவும் கண்டறியப்பட்டு, கிராமப்புற தொழில் நிறுவனங்கள் உருவாகிட ஏதுவாகிறது. இந்த துணைகூறின் கீழ் மேற்கொள்ளப்படும் தொடர் நடவடிக்கைகள் பின்வருமாறு

(அ) மாவட்ட அளவிலான ஆய்வு
(ஆ) மதிப்பு சங்கிலி பகுப்பாய்வு
(இ) பங்கேற்புடன் கூடிய தொழில் வளர்ச்சி திட்டம்

மேற்கண்ட நடவடிக்கைகளின் ஒட்டு மொத்த விளைவாக, முதலீட்டிற்கான, கிராம, வட்டார, மாவட்ட அளவிலான திட்டங்கள் உருவாக்கப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட மதிப்பு சங்கிலி மூலமாக கண்டறியப்பட்ட தொழில்களை மேற்கொள்ள வழிவகை செய்யப்படும்.

**தொழில்களுக்கான தொழில் நிதித்திட்டம்:**

இக்கூறு/செயல்பாடு திட்ட ஊராட்சிகளில் உருவாக்கப்படும் தனிநபர் மற்றும் குழு தொழில்களுக்கு, தொழில் திட்ட அடிப்படையில், ஈடான மானிய நிதி திட்டம் மற்றும் ஏனைய நிதி சேகைள் மூலம் நிதி நிறுவனங்களில் நிதி இணைப்பை பெற்றுத்தர வழிவகை செய்யும்.